# DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF CHIEF JUDGE, SMALL CAUSES, CHENNAI

**M.C.OP.No. 5944/2019** **DATE :28.08.2024**

Deposition of Witness : P.W.2
Name : Mr. Rajamohan
Father/Husband Name : Mr. Kannan
Age :
Address :
Cell Phone No :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 28th day of August 2024.

------------------------------------------------------------------------------------------------

**1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் மருத்துவர் இல்லை, வழக்கறிஞர்தான். முதல் விசாரணை 2ம் பத்தியில் சொல்லியுள்ள எலும்பு முறிவுகள் பற்றி நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எலும்பு முறிவு சம்பந்தமான சங்கதிகள் எனக்கு மற்றவர்கள் சொல்லித்தான் தெரியும் என்றால் சரியல்ல, நேரடியாக நான் பார்த்தேன். எலும்பு முறிவு பற்றி கூறுவதற்கு எனக்கு கல்வித்தகுதி இல்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்றபோது மருத்துவர் சொன்னதை சொல்லியுள்ளேன். மருத்துவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றாலும் நான் தவறாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

2. நான் விபத்து நடந்தவுடன் 100க்கு தகவல் சொல்லவில்லை. உண்மையில் நான் விபத்தை பார்த்திருந்தால் வழக்கறிஞராக இருக்கும் நான் அவசர போலீஸ் 100க்கு தகவல் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. பார்த்திருந்தால் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய கார் டிரைவர்தான் காயமடைந்த நபரை மருத்துவமனையில் சேர்த்து விபத்து பதிவேடு பதிவு செய்யும்போது இருந்தார். விபத்தை நான் பார்த்திருந்தால் போலீசாரிடம் சென்று என்னுடைய வாக்குமூலத்தை பதிவுசெய்யுங்கள் என்று சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தனர். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் விசாரித்திருந்தால் சாட்சிப்பட்டியலில் என் பெயர் இருந்திருக்கும் என்றாலும் சரியல்ல.

3. இவ்வழக்கை further action dropped என்று போலீசார் முடித்துவைத்துள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு அழைப்பாணை வரவில்லை இறந்தவரின் மனைவி அழைத்து சொல்லிதான் வந்தேன். அவ்வாறு முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை. இறந்தவர் வழக்கறிஞர் என்பதால் பார்க்காத விபத்தை பார்த்ததாக சொல்லி இழப்பீடு கிடைக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date:28.08.2024.

Sd/- D. Lingeswaran,
Chief Judge,
Court of Small Causes.